

திருவாரூரில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் நவீன பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகளை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சாரு ஸ்ரீ, நகரச் செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ் நகர் மன்றத் தலைவர் புவனப்பிரியா செந்தில், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில் மற்றும் அரசு அதிகாரிகள், நகர்மன்ற உறுப்பினர்கள் உடன் உள்ளனர்.

### தமிழ்நாடு முதலமைச்சரின் சீரிய முயற்சியால்

# தமிழ்நாட்டில் உயர் கல்வியில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் பெருமிதம்!

திருப்பூர், அக். 8-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் அவர்கள் சீரிய முயற்சியால் தமிழ்நாட்டில் உயர் கல்வியில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது என்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், மனிதவள மேம்பாட்டுதுறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் பெருமிதத்துடன் கூறினர்.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஒன்றியம், அருள்புரம் டி.ஆர்.ஜி. திருமண மண்டபத்தில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் திருப்பூர் மாவட்டத்தில் 2023-24 ஆம் ஆண்டு பொதுத் தேர்வில் நூறு விழுக்காடு தேர்ச்சி அளித்த பள்ளித்தலைமை ஆசிரியர்கள், முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி 05.10.2024 சனிக்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் 2023-24 ஆம் ஆண்டு பொதுத்தேர்வில் நூறு விழுக்காடு தேர்ச்சி அளித்த பள்ளித்தலைமை ஆசிரியர்கள், முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது:-

கடந்த 2023-24ம் கல்வியாண்டில் இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் நூறு விழுக்காடு தேர்ச்சி அளித்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள், முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பாராட்டு விழா நடைபெறுகிறது. இந்த 100 சதவீதம் என்பது தொடர வேண்டும் என்பதுவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் விருப்பம் மற்றும் எனது விருப்பமும் அதுவே, பள்ளிக்கல்வித்துறை மற்றும் ஆசிரியர்கள் இணைந்து பெற்றோர்கள் ஒத்துழைப்புடன் செயல்பாடுகள் இருக்க வேண்டும்.

அரசுப்பள்ளியில் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். இந்த ஆண்டு பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விலும் 100 சதவீதம் இலக்கை அடைய வேண்டும். முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கையின் அடிப்படையில் அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆசிரியர்களின் உழைப்பு மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்பும் தான் அதற்கு சாத்தியம். கல்வியில் மற்ற மாநிலத்திற்கே முன்மாதி யாக நமது மாநிலம் இருந்து வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது உயர்கல்விக்கு என தனியாக இலக்காவை உருவாக்கினார்கள். கர்மவீரர் காமராஜர் அவர்கள் பிறந்த தினத்தை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தார்கள். சத்துணவில் வாரம் 3 நாட்கள் முட்டை வழங்கப்பட்டது. தொழிற்கல்வி படிப்பிற்கு நுழைவு தேர்வு ரத்து செய்யப்பட்டது.

திருப்பூர் மாவட்டத்தில் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு கடந்த 2023 -2024 ஆம் கல்வியாண்டில் தேர்வு எழுதியவர்கள் எண்ணிக்கை 23,841 தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 23,242, தேர்ச்சி சதவீதம் 97.45 சதவீதம் பெற்று மாநில அளவில் முதலிடம் பெற்றது. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு 2023-2024 ஆம் கல்வியாண்டில் தேர்வு எழுதியவர்கள் எண்ணிக்கை 30,180, தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 27,879, சதவீதம் தேர்ச்சி 92.38 சதவீதம் ஆகும் அதில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற அரசு பள்ளிகள் 154, தனியார் பள்ளிகள் 112 என மொத்த பள்ளிகளின் எண்ணிக்கை 266, இதில் மேல்நிலை இரண்டாமாண்டு மற்றும் பத்தாம் வகுப்பில் சேர்ந்த 100 சதவீதம் தேர்ச்சி வழங்கிய அரசு பள்ளி பாட ஆசிரியர்களின் எண்ணிக்கை 1902, கடந்த 2023-2024 ஆண்டு பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் தமிழ் பாடத்தில் மாநிலம் முழுவதும் 8 மாணவிகள் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றனர். திருப்பூர் மாவட்டத்திலிருந்து மட்டும் நான்கு மாணவிகள் தமிழ் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். மொத்தம் எட்டு பேரில் ஆறு பேர் தனியார் பள்ளிகளை சேர்ந்த மாணவிகளும் ஒருவர் அரசு உதவி பெறும் பள்ளியை சார்ந்த மாணவியும் ஒரேயொரு அரசுப் பள்ளி மாணவி திருப்பூர் மாவட்டம் கணக்கம்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியைச் சார்ந்த மாணவி ஆவார். மீதமுள்ள 3 மாணவிகள் தனியார் பள்ளி மாணவியர்கள் ஆவார்.

2023-2024 ஆம் கல்வியாண்டில் நீட் தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை 436. மருத்துவக் கல்லூரி சேர தகுதி பெற்றவர்கள் 245 பேர், 7.5 சதவீதம் இடஒதுக்கீட்டின் மூலம் 38 மாணவர்கள் பயன்பெற்றுள்ளார்கள். இதுவும் மாநிலத்தில் நமது மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது. நான் முதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரிக் கனவு மற்றும் உயர்வுக்குபடி திட்டத்தின் கீழ் அரசு பள்ளியில் தேர்ச்சி பெற்ற 10,126 மாணவர்களில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர் கல்வி படிப்பில் 9,849 மாணவர்களும் பிற பிரிவு பாடங்களில் 41 மாணவர்களும் 97.30 சதவீதம் உயர் கல்வியில் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர்.

திருப்பூர் மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேர்ந்துள்ள மாணவ, மாணவியர்களுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் 6,000 மாணவியர்களும், தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் 3,953 மாணவர்களும் கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1000/ அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், விலையில்லா சீருடைகள், விலையில்லா மடிக்கணினிகள், விலையில்லா மிதிவண்டிகள், விலையில்லா வண்ண பென்சீல்கள், விலையில்லா புத்தகங்கள், விலையில்லா நோட்டு புத்தகம், விலையில்லா காலணிகள், காலுறைகள் மற்றும் கால் ஏந்திகள், இலவச பேருந்து பயண அட்டை, விலையில்லா புத்தக பை, கணித உபகரணப் பெட்டி, புவியியல் வரைபடம், சிறப்பு ஊக்கத் தொகை, கம்பளிச் சட்டைகள், மழையாடைகள் மற்றும் காலுறைகள், வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான நிதியுதவி, விலையில்லா கிரையான்கள் என எண்ணற்ற திட்டங்கள் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் செயல்பட்டு வருகிறது.

ஆசிரியர்களின் கண்டிப்பு என்பது கூட மாணவர்களின் எதிர்கால நன்மைக்காகவே இருக்கும். மாணவர்களை கல்வியில் மேலும் மேலும் உயர தொடர்ந்து பணியாற்ற வேண்டும். கல்வி அழிவில்லாத சிறந்த செல்வம் என்ற திருவள்ளுவரின் கூற்றிக்கிணங்க, பெற்றோர்கள் சேமித்து வைத்த செல்வம் தொடரும் என கூற முடியாது. ஆனால் கற்ற கல்வி செல்வத்தை அழிக்கமுடியாது. வாழ்க்கையில் வழி காட்டக்கூடியது கல்வி செல்வமே. இந்த அழியாத செல்வத்தை தந்து கொண்டிருக்கும் மாநிலத்திலேயே இதுபோன்ற நிகழ்ச்சி திருப்பூர் மாவட்டத்தில் நடைபெற காராணமாக இருக்கும் அனைத்து ஆசிரியப் பெருமக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்று அமைச்சர் கூறினார்

அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தெரிவித்ததாவது :தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத் திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் மாணவர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சீரிய முயற்சியால் தமிழ்நாட்டில் உயர் கல்வியில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகிறது. அதற்காக உழைப்பை கொடுத்த ஆசிரியப் பெருமக்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மாணவர்களை உயர்ந்த நிலைக்கு உருவாக்கக்கூடிய பொறுப்பு ஆசிரியப் பெருமக்களுக்கே உள்ளது. மாணவர்கள் எந்த உயர் பதவிற்கு வருவதற்கு அடிப்படை காரணம் படிப்பு மட்டுமே. திருப்பூர் மாவட்டம் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் மாநில அளவில் முதல் முதலிடம் பிடித்துள்ளது. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி விகிதம் ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டேதான் இருக்கிறது. மாநில அளவில் முதலிடம் என்பது பெருமையான ஒன்று. இதற்காக ஆசிரியப் பெருமக்களின் கடின உழைப்பை தந்ததால் தான் திருப்பூர் மாவட்டத்திற்கு இந்த வெற்றி கிடைத்துள்ளது.

கடந்த மூன்றாண்டு காலமாக ஆதிதிராவிட நலத்துறையின் சார்பில் எங்களது பங்களிப்பை அளித்ததன் மூலம் ஆதிதிராவிட நலத்துறை மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் அதிகரித்துள்ளது மனநிறைவை தந்துள்ளது. அரசுப்பள்ளி மாணவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் முழுமையாக சென்றடைய வேண்டும். பள்ளிக்கல்வி முடித்த அனைத்து மாணவர்களும் உயர்கல்வி கற்க வேண்டும். ஆதிதிராவிட நலத்துறையின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள அனைத்து திட்டங்களும் அந்த மாணவர்களுக்கு சென்றடைய வேண்டும். திருப்பூர் மாவட்டம் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் முதலிடம் பிடிக்க 100 சதவித பங்களிப்பை அளித்த அனைத்து ஆசிரியப் பெருமக்களுக்கும் என நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் ச.ராஜசேகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஈ.தங்கராஜ், மு. ஜெயக்குமார், மாவட்ட அறக்காவலர் குழுத்தலைவர் கீர்த்தி சுப்பரமணியம், பல்லடம் நகர செயலாளர் ந.ராஜேந்திரகுமார், பொங்கலூர் ஒன்றிய செயலாளர் ஜேசிபி பாலுச்சாமி, பல்லடம் ஒன்றியக்குழு துணை தலைவர் ஈ.பாலசுப்பரமணியம், மாநகராட்சி கல்விக் குழுத்தலைவர் பெ.திவாகரன், மாவட்ட முன்னாள் அவைத் தலைவர் திருமூர்த்தி, மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மீ.உதயகுமார், நந்தா கல்வி நிறுவனங்கள் தலைவர் வெ.சண்முகம், மாவட்ட கல்வி அலுவலர்கள் (இடைநிலை) க.காளிமுத்து (திருப்பூர்), (தொடக்கக்கல்வி) ஈ.தாமோதரன் (திருப்பூர்), ப.ராஜாமணி (தாராபுரம்), உதவி திட்ட அலுவலர் அண்ணாத்துரை, நத்தா கல்வி நிறுவனம் செயலர் ச.திருமூர்த்தி, முதல்வர் ரகுபதி உள்பட கழக நிர்வாகிகள், தலைமையாசிரியர்கள், முதல்வர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் திருக்கடையூரில் ஆட்டோ ஸ்டாண்டக்கு பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுதலில் இருந்து ரூ 10 லட்சத்தில் அமைக்கப்பட்டு வரும் இரும்பு செட்டை ( தகர மேற்கூரையிலான) மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் பார்வையிட்டார். உடன் செம்பனார்கோயில் மத்திய ஒன்றிய செயலாளர் அமிர்த. விஜயகுமார் மற்றும் பலர் உள்ளனர்





திருப்பூர் வடக்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பில் புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம் பூலூர் ஊராட்சி நடுவேலம்பாளையத்தில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ப.கலைச்செல்வி ஏற்பாட்டில் மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் மாலதி நாகராஜ், மாநில மகளிர் பிரச்சார அணி செயலாளர் செ.உமாமகேஸ்வரி, மாவட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் எஸ்.குமார், ஒன்றிய செயலாளர்கள் நா.சோமசுந்தரம், சு.கிருஷ்ணமூர்த்தி, பொ.அசோகன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ஆனந்தி, ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் ஜெயந்தி, ஒன்றிய மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மஞ்சுளா, மாவட்ட மகளிர் தொண்டரணி தலைவர் விஜயா, மாநகர அமைப்பாளர்கள், நிர்வாகிகள் கௌரி, மகேஸ்வரி, சுகாசினி, உமா மகேஸ்வரி, மகாராணி, அமுதா, சிவானந்தி. மோகனா, கனிமொழி உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர மகளிர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவாரூர், அக். 8-

திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் இன்று (08.10.2024 - செவ்வாய்கிழமை) காலை 10.00 மணியளவில் நடைபெற விருப்பதையொட்டி திருவாரூர் மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர்தம் அறிக்கையில் கூறியுள்ளதாவது,

இன்று (08.10.2024 - செவ்வாய்க்கிழமை) 10.00 காலை மணியளவில், நமது திருவாரூர் மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம், கழக அவைத்தலைவர் க. தன்ராஜ் தலைமையில் திருவாரூர் முத்துவேலர் அஞ்சுகம் நினைவரங்கத்தில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் மாவட்ட கழகத்தின் பெயரால் வங்கிக்கணக்கு துவங்குதல், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா, வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப் படவுள்ளது.

அதுசமயம் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன்எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# கருநாடக மாநில தி.மு.க. சார்பில் விருதுகள் அறிவிப்பு!

## மாநில அமைப்பாளர் நா.இராமசாமி அறிக்கை!

பெங்களூரு, அக். 8-

கர்நாடக மாநில தி.மு.க. அமைப்பாளர் ந.இராமசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல் வாழ்த்துக்களுடன் கருநாடக மாநில தி.மு.க. சார்பில் நடைபெறும் கழக பவள விழா முப்பெரும் விழா வில் 2024ஆம் ஆண்டுக்கான விருதுகள் பெறுவோர் அறிவிப்பு வருமாறு:-

பெரியார் விருது திருமதி. வெண்ணிலா கதிரவன், அண்ணா விருது கே.எஸ். சுந்தரேசன், கலைஞர் விருது, தங்கவயல் பொன் சாரங்கபாணி, பேராசிரியர் விருது ஏ.டி. ஆனந்தராஜ், மு.க. ஸ்டாலின் விருது, தங்கவயல் கு.ஆதித்தன், முரசொலிமாறன் விருது, க. நாராயணசாமி, உதயநிதி ஸ்டாலின் விருது, எம். முருகானந்தம் ஆகியோர் விருது பெறுகின்றனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



அக்டோபர் 2 காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், மடம் ஊராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர், சமூக நீதி காவலர்,கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில், பொதுப்பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனைப்படி, தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் புவனேஸ்வரி பெருமாள் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது, இதில் மாவட்ட கல்வி அலுவலர் கார்த்திகா,வட்டார வளர்ச்சி அலுவலர் குழந்தைவேல், ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊராட்சி செயலர், கிராம பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவ அணி இணைச் செயலாளருமான டாக்டர்.இரா. இலட்சுமணன் கோலியனூர் ஒன்றியம், கப்பூர், கோவிந்தபுரம், சதிஷ் ராசாத்தி இவர்களின் வீடு எரிந்து சேதமானதை அறிந்து நேரில் சென்று பார்வையிட்டு, ஆறுதல் கூறி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் கோலியனூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் க.மும்மூர்த்தி, வட்டாட்சியர் கனிமொழி, ஊராட்சி மன்ற தலைவர் கௌரி ராஜா, ஒன்றிய கவுன்சிலர் ஆறுமுகம், வருவாய் ஆய்வாளர் சத்தியபாமா, கிராம நிர்வாக அலுவலர் கலைவாணி சைலஜா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நன்னாடு முத்துசாமி, கிளைச் செயலாளர்கள் பழனி, பிரதிநிதி சண்முக பாண்டி, வார்டு உறுப்பினர் முரளி, முன்னாள் கவுன்சிலர் தண்டபாணி, சுப்பிரமணி, மதி மற்றும் பலர் இருந்தனர்.